உ
கணபதி துணை


அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு

# ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

## Ariyalai, Neernochchithalvu Sri Siththivinayagar Temple

Ariyalai, Jaffna, Sri Lanka. அரியாலை. யாழ்ப்பாணம். இலங்கை. T.P-0212215461

பதிவு இல. HA/5/JA/218

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| திரு.கு.ரகுகாந்தன் | திரு.சி.சந்திரகாந் | திருமதி மோ.நந்தினி |
| 0776176423 | 0771547044 | 0775205459 |


15.03.2024

பொதுச்சபை உறுப்பினர்கள், விநாயகர் அடியார்கள் அனைவருக்கும்

**சண்டேஸ்வரர் தேர்த்திருப்பணி தொடர்பான தெளிவூட்டல்**

எமது நிர்வாக சபையினருக்கு திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரன் (கனடா) அவர்கள் சண்டேஸ்வரருக்கு புதிய சித்திரத்தேர் வடிவமைத்து வழங்க விரும்புவதாகவும் அதற்கான அனுமதிக்கோரிக்கை கடிதத்தினை what's up செயலி மூலமாக அனுப்பியிருந்தார். இக்கோரிக்கை கடிதம் கடந்த 24.12.2023 திகதி நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆராயப்பட்டு சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டு அது தொட்பான கடிதம் அவருக்கு what's up செயலி ஊடாக அனுப்பப்பட்டது.

எம்மால் கடிதம் வழங்கப்பட்ட சில தினங்களில் எமது கடிதத்திற்கு பதில் அனுப்பாமல் எமது ஆலயப்பெயர் தலைப்பில் அதாவது நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் என்ற தலைப்பில் எமது நிர்வாக சபையின் அனுமதியின்றி **தேர் வெள்ளோட்டம் என்ற தலைப்பில் திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரனின் புகைப்படத்துடன் தேர் சிற்ப ஆசாரியின் படத்துடனும் சமூக வலைத்தளங்களில் வெள்ளோட்ட பத்திரிகை விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.** எமது ஆலய தலைப்பில் தனிநபரின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டிருந்தமை பல அடியார்களினால் எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன் கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பாக நிர்வாக சபையில் ஆராயப்பட்டு இவ்விளம்பரத்தினை சமூகவலைத்தளங்களில் இருந்து மீளப்பெறுமாறு அறிவுறுத்தி கடிதம் 07.01.2024 திகதி திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரனுக்கு அனுப்பப்பட்டது.

எம்மால் கடிதத்தில் கோரப்பட்ட வெள்ளோட்ட விளம்பரம் சமூக வலைத்தளங்களில் அகற்றப்படாமல் இருந்தது அவதானிக்கப்பட்டது. இதன் பின்பு மீண்டும் எமது நிபந்தனைகளை ஏற்று கடிதம் வழங்கும் படியும், வெள்ளோட்டம் தொடர்பான சமூக வலைத்தள பதிவுகளை உடனடியாக மீளப்பெறுமாறும், தேர்த்திருப்பணி தொடர்பான கலந்துரையாடல்களுக்கு உள்ளூர் பிரதி ஒருவரை நியமித்து எமக்கு அறியத்தரும்படியும் மீண்டும் 18.01.2024 கடிதம் அனுப்பப்பட்டது.

எமது கோரிக்கைகளுக்கு எழுத்துமூலமான பதில்கள் ஏதும் கிடைக்காமையினால் இவ்விடயம் தொடர்பாக 04.02.2024 நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆராயப்பட்டு இத்திருப்பணி தொடர்பான முடிவினை இனி நடைபெறவுள்ள வருடாந்த பொதுச்சபையின் தீர்மானத்திற்கு சமர்ப்பிப்பது என தீர்மானிக்கப்பட்டு அதுவரை தேர்த்திருப்பணி ஆரம்ப வேலைகளை தாமதிக்குமாறு கோருவது எனவும், திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரன் அவர்கள் எமது நிர்வாகம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் விமர்சனம் செய்வதையும், அவருக்கு எமது நிர்வாக சபையின் மீது நம்பிக்கையின்மை காரணமாகவும் இம்முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக 05.02.2024 திகதியிடப்பட்ட கடிதம் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.கடிதம் அனுப்பப்பட்டு சில நிமிடங்களில் அக்கடிதமானது சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு

அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
Ariyalai, Neernochchithalvu Sri Siththivinayagar Temple
Ariyalai, Jaffna, Sri Lanka. அரியாலை, யாழ்ப்பாணம். இலங்கை. T.P-0212215461

பதிவு இல. HA/5/JA/218

தலைவர்
திரு.கு.ரகுகாந்தன்
0776176423

செயலாளர்
திரு.சி.சந்திரகாந்
0771547044

பொருளாளர்
திருமதி மோ.நந்தினி
0775205459

எமது நிர்வாகசபை உறுப்பினர்களை அநாகரிகமாகவும் தரக்குறைவாகவும் பேசிய ஒலிப்பதிவுகள் வெளியிடப்பட்டமை எம்மை மேலும் கவலையடையச்செய்தது. அதன்பின்னர் 06.02.2024 திகதியிடப்பட்டு திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரனால் கடிதம் ஒன்று எமக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதில் நாம் முன்னர்அனுப்பிய கடிதங்கள் எதுவுக்கும் பதிலளிக்காமலும் உள்ளூர் பிரதிநிதி ஒருவரை நியமிப்பது தொடர்பாகவும் எதுவும் தெரிவிக்கவில்லை, இருப்பினும் அவர் எமது தேவஸ்தானத்திற்கு வருகை தருமிடத்து அவருடன் கலந்துரையாடுவதற்காகவும் குறித்த பிரச்சினையை சுமூகமாக தீர்க்கவும் எமது நிர்வாகசபையினால் ஆரம்பகால நிர்வாகசபைத்தலைவர் கலாநிதி சு மோகனதாஸ், முன்னாள் தலைவர் திரு சு கனகலிங்கம், நீண்டநாள் நிர்வாகசபை உறுப்பினரும் உபதலைவருமாகிய திரு அ உபயசேகரம் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தவேளை,

எமது நிர்வாகசபை சிரேஷ்ட உபதலைவர் வைத்தியகலாநிதி ம அருங்கரன் அவர்கள் திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்துகொண்டிருந்தவேளை அங்கு வருகை தந்த திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரன் எமது சிரேஷ்ட உபதலைவர் அவர்களை வலிய சென்று கதைத்துவிட்டு அவரை அவதூறாக பேசியது மட்டுமல்லாமல் அவருக்கு இறுதி எச்சரிக்கை (Last warning) எனவும் ஒலிப்பதிவு செய்து சமூகவலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளார். இதன் பின்னர் எமது நிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள அடங்கிய குழு திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரனை அழைத்து 23.02.2024 ஆம் திகதி மாலைப்பூசை நிறைவடைந்ததும் கலந்துரையாடி அவரது கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் தமது நிலைப்பாட்டினையும் தெளிவுபடுத்தினர். **(உப குழுவின் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)**

சிரேஷ்ட உறுப்பினர்கள் அடங்கிய உபகுழுவினரின் கருத்துக்களை செவிமடுக்காமலும் நிர்வாகத்தின் அனுமதியின்றியும் 24.02.2024 ஆம் திகதியன்று எமது தேவஸ்தானத்தில் தேருக்கான ஆரம்ப வேலைகளை தன்னிச்சையாக செய்துள்ளமையும், எமது சிரேஷ்ட உறுப்பினர்களை அவமதித்தமையும் எம்மை மேலும் கவலையடையச்செய்தது. எனவே குறித்த தேர்த்திருப்பணி தொடர்பாக அவருடன் இனிவருங்காலக்களில் எதுவித தொடர்பாடல்களிலும் ஈடுபடுவதில்லை எனவும், அவரின் தேர்த்திருப்பணி கோரிக்கையை பொதுச்சபையின் தீர்மானத்திற்கு சமர்ப்பிக்கும் எமது முடிவில் இருந்து மாறுவதில்லை என முடிவு செய்துள்ளோம்.

குறிப்பு- திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரனால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு பதிவேற்றப்பட்ட சகல ஒலிப்பதிவுகளும் எதிர்வரும் பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதுடன், இக்கடிதம் மூலம் அவருக்கு தேர் செய்வதற்கான அனுமதி மீளப்பெறப்பட்டுள்ளது என்பதனையும் அடியார்களுக்கும், பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி.

தலைவர் | செயலாளர் | பொருளாளர்

(முத்திரை: நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம், யாழ்ப்பாணம் — பதிவு இல. HA/5/JA/218)

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

02.03.2024

கலாநிதி சு மோகனதாஸ்
கண்டி வீதி
அரியாலை
யாழ்ப்பாணம்

கௌரவ தலைவர்
நீர்நொச்சித்தாழ்வு ஶ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
அரியாலை
யாழ்ப்பாணம்

**சண்டேஸ்வரர் தேர்த்திருப்பணி**

நிர்வாகசபையினரால் பேராசிரியர் சு மோகனதாஸ், திரு சு கனகலிங்கம், திரு அ உபயசேகரம் ஆகிய நாம் சண்டேஸ்வரர் தேர்த்திருப்பணி தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையை ஆராய்ந்து சுமூகமாக தீர்த்து வைக்குமாறு கோரப்பட்டிருந்தோம்

மேற்படி திருப்பணி செய்யவிரும்பும் திரு தர்மலிங்கம் இலங்கேஸ்வரனுடன் 23.02.2024 அன்று மாலை கலந்துரையாடி அவருக்கு பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளோம்

1. நிர்வாகசபையால் இவ்விடயமாக தங்களுக்கு எழுதிய கடிதங்களுக்கு எழுத்துமூலமான பதிலை வழங்கவேண்டும்.

2. கோவிலின் நற்பெயர், சமூக ஒற்றுமை, நிர்வாகசபை இணக்கப்பாடு, தனிமனித கௌரவம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படும் விதமான செய்திகள் சமூகவலைத்தளங்களில் வெளியாவதையிட்டு எமது கவலையையும் ஆட்சேபனையையும் வெளிப்படுத்தியுள்ளோம்

3. எல்லா செயற்பாட்டிற்கும் இணக்கப்பாடான சூழலும் நிர்வாக சபையின் ஒத்துழைப்பும் மிக அவசியம் என்பதை எடுத்துக்கூறியுள்ளோம்

4. சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் பிரசுரத்தால் நிர்வாக சபை உறுப்பினர்கள் தனித்தும் ஒருமித்தும் அடைந்துள்ள துயரத்தை சுட்டிக்காட்டியுள்ளோம், எனவே அப்பதிவுகளை மீளப்பெறுமாறும் வலியுறுத்தியுள்ளோம்

நாம் அனைவரும் ஒன்றிணைந்து நல்ல சூழலை உருவாக்கும் வரை சண்டேஸ்வரர் தேர் செய்யும் பணியினை ஒத்திவைக்குமாறு அறிவுறுத்தியுள்ளோம் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

சுபம்

உப குழு சார்பாக

Smohanadas
சு. மோகனதாஸ்

Vidhyajothi., Professor.S.Mohanadas
B.Sc (Hons)., Ph.D (Adelaide).,
C.Chem., F.I.Chem.C.
Former Vice - Chancellor,
University of Jaffna.